DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ராணி | Father/Husband Name : அந்தோணி |
| Age : 41 | Village : கோவில்பட்டி |
| Taluk : | Calling : டெய்லர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 Mar 2026 12:23

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லர் தொழில் செய்து வருகிறேன்.

2. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன அந்தோணி எனது அப்பா ஆவார். எனது அப்பா அந்தோணி கொத்தானார் வேலை செய்து வந்தார். கடந்த 2018ம் ஆண்டு காலை 09.30 மணியளவில் உப்பத்தூர் அருகேயுள்ள சங்கராபுரத்தில் வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு அவருக்கு சொந்தமான டிவிஎஸ்-50 இருசக்கர வாகனத்தில் சென்றார். பின்னர் காலை சுமார் 11.00 மணியளவில் எனது அப்பாவின் செல்போன் எண்ணிலிருந்து யாரோ ஒரு நபர் தொடர்புகொண்டு எனது அக்கா தங்கத்திடம் எனது அப்பாவிற்கு உப்பத்தூர் விலக்கில் விபத்து ஏற்பட்டிருப்பதாக தகவல் கூறியிருக்கிறார். உடனே அதுகுறித்து எனது அக்கா என்னிடம் தகவல் கூறினார்.

3. தகவல் தெரிந்து, நான், எனது அக்கா மற்றும் அவரது மகனுடன் விபந்து நடந்ததாக கூறிய இடத்திற்கு வந்து பார்த்தபோது எனது அப்பா ஓட்டிச் சென்ற அவரது டிவிஎஸ் எக்ஸெல் வாகனம் ரோட்டிலிருந்து இறங்கி மண் பாதையில் கிடந்தது. நாங்கள் வருவதற்குள் எனது காயம்பட்ட எனது அப்பாவை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டிருந்த இடமானது உப்பத்தூர் விலக்கு ஆகும். உப்பத்தூர் விலக்கானது சாத்தூர் - கோவில்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று நான் கேள்விப்பட்டேனா என்றால் நாகர்கோவிலிருந்து மதுரை நோக்கி செல்கின்ற அரசு பேருந்து பிரேக் பிடிக்காமல் எனது அப்பா மீது மோதியதாக அந்த பேருந்தில் பயணித்த நபர்கள் என்னிடம் தகவல் கூறினார்கள். நான் சம்பவ இடத்தில் பார்த்தபோது அந்த அரசு பேருந்தும் சம்பவ இடத்திற்கு அருகேயுள்ள மண்ரோட்டில் நின்றுகொண்டிருந்தது. அந்த வாகனத்தை யார் ஓட்டியது என்று எனக்கு தற்போது நினைவில்லை.

4. நான் காயம்பட்ட எனது அப்பாவை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது அப்பாவிற்கு வலது காதின் பின்புறமும், கைகளிலும் காயம் ஏற்பட்டிருப்பதாக மருத்துவர் என்னிடம் தகவல் கூறினார். மேல்சிகிச்சைக்காக எனது அப்பாவை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போகும் வழியிலேயே எனது அப்பா அவசர ஊர்த்தியில் வைத்து இறந்துவிட்டார். நடந்த சம்பவத்திறகு நான் சாத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.**(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

5. வழக்கு விபத்து நடைபெறும் போது என்னுடைய அப்பாவிற்கு 61 வயது இருக்கும். என்னுடைய அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம்

உண்டா என்றால் இருந்தது. மோட்டார் வாகன ஆய்வாளர் என்னுடைய அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றாலும், என்னுடைய அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் உண்டு என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய அப்பா ஓட்டி சென்ற வாகனம் என்ன வாகனம் என்றால் டிவிஎஸ் 50 இருசக்கர வாகனமாகும். வழக்கு விபத்து சமயத்தில் என்னுடைய அப்பா வாகனத்திற்கு காப்பீடு செய்திருந்தாரா என்றால் தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்த போது என்னுடைய அப்பா TVS 50 இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்று கூறினேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

6. ஆர்யாஸ் ஹோட்டல் எந்த திசையில் இருக்கிறது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய அப்பா அவருடைய இருசக்கர வாகனத்தின் முன்பு ஒரு சிமெண்ட் மூட்டையை வைத்துக்கொண்டு சென்றார் என்றால் சரிதான். அவர் நான்கு நான்கு வழிச்சாலையை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி உப்பத்தூரை நோக்கி கடந்து சென்றார் என்றால் என்னுடைய அப்பா நான்கு வழிச்சாலையை கடந்த பிறகு மண் தரையில் வைத்து தான் விபத்து ஏற்பட்டுள்ளது.

7. என்னுடைய அப்பா வாகனத்தில் முன்னாள் சிமெண்ட் மூட்டை வைத்திருந்ததால் வாகனத்தை ஓட்ட முடியாமல் அங்கும் இங்கும் சென்றார் என்றால் இல்லை. நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், என்னுடைய அப்பா சிமெண்ட் மூட்டையை வைத்துக் கொண்டு இருசக்கர வாகனத்தை ஓட்டியதால் வண்டியை பேலன்ஸ் செய்ய முடியாமல் அங்கும் எங்கும் சென்று கொண்டு ஓடி சென்றார் என்றால் இல்லை. என்னுடைய அப்பா அவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தை கண்ட்ரோல் செய்ய முடியாமல் பேருந்து மீது மோதி விட்டார் என்றால் இல்லை. என்னுடைய அப்பாவின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. என்னுடைய அப்பா இறப்பு தொடர்பாக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சம்பவ இடம்பெற்று எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

8. போலீசார் என்னை விசாரித்த போது பேருந்து பிரேக் பிடிக்காமல் வந்ததாக பயணிகள் கூறினார்கள் என்று கூறும் விபரத்தை போலீசாரிடம் கூறினேனா என்றால் கூறினேன். நான் புகார் மனுவில் எங்கு வைத்து கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு போலீசார் தயார் செய்த புகார் மனுவில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கு விபத்திற்க்கும் அரசு பேருந்து ஓட்டுனருக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள இழப்பீடு வழக்கிற்கு ஆதரவாக, போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நான் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.